# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2016 - 2017 අප්‍රේල් මස 21 වැනි සිකුරාදා - 2017.04.21

*2016 ஆம் இலக்கம் – 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 74 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.***– (i) குற்றச் செயல்களைத் தடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தேருநர்களைப் பதிவு செய்தல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2017, மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் (கொழும்பில் அதன் சிவில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

இலங்கை, மொரட்டுவை, இஹல இந்திபெத்த, 28/3 ஆம் இலக்க இடத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் நடத்திச் செல்லும் பீவீ 94209 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்ட ஜனக பேர்னிச்சர் (பிறைவேட்) லிமிட்டட் சம்பந்தமான விடயமொன்றில்

வழக்கு இல. : CHC/01/2017/CO/
தன்மை: கணக்கெடுத்து மூடுதல்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவிற்கு அமைய மற்றும் அதன் கீழ் மன்றால் கணக்கெடுக்கப்பட்டு மூடுவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் ;

ஏசியா அசட் பைனான்ஸ் பீஎல்சீ, இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 3.

மனுதாரர்கள்

சிவில் நியாயாதிக்கத்தைச் செயற்படுத்தி கொழும்பில் இயங்கும் மேல்மாகாண மேல் நீதிமன்றத்தால் மேற் பெயர் குறிப்பிட்ட கம்பனியின் கணக்கெடுத்து மூடுவதற்காக கொழும்பு 03, தர்மபால மாவத்தை, 76/1 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஏசியா அசட் பைனான்ஸ் பீஎல்சீ ஆல் 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி மனுவொன்றை மன்றுக்கு சமர்ப்பித்துள்ளதுடன் இம் மனு 2017 ஆம் ஆண்டு ஆனி மாதம் 20 ஆம் திகதி மன்றில் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன் இம் மனு சம்பந்தமாக கட்டளையொன்றை ஆக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அல்லது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் எந்தவொரு கம்பனி அல்லது கடன்கொடுப்பவர் அல்லது பங்களிப்பு செய்பவருக்கு அந் நோக்கத்திற்காக அதனை விசாரிக்கும் சந்தர்ப்பத்தில் தாமாக அல்லது தனது வழக்கறிஞர் மூலம் தோன்ற முடியும் எனவும் மனுவின் பிரதி தேவைப்படும் நபர் கம்பனியின் யாராவது அல்லது கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்பு செய்தவர் குறிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தினால் கீழே கையொப்பமிட்டவரினால் அது வழங்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சிரந்தி குணவர்தன அசோசியேட்ஸ்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
இல. 22/1, எலியட் பிளேஸ்,
பொரள்ளை, கொழும்பு 08.

**குறிப்பு**.- மனு சம்பந்தமாக விசாரணையின்போது சமுகமளிக்க விரும்பும் எந்தவொரு நபர் தனது விருப்பை மேற்குறிப்பிட்ட சிரந்தி குணவர்தன அசோசியேட்ஸ் சட்டத்தரணிகளுக்கு எழுத்துமூலம் அல்லது தபால் மூலம் அறிவித்தல் வேண்டும். அறிவிப்பவரின் பெயர், விலாசம், கம்பனியாயிருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் விலாசம் ஆகியனவற்றை அறிவிப்பதுடன் தனி நபர் அல்லது கம்பனியால் அல்லது அவர்களது ( வழக்கறிஞர் இருப்பின்) வழக்கறிஞர் கையொப்பமிட்டு 2017 ஆம் ஆண்டு ஆனி மாதம் 19ஆம் திகதி பி.ப.6.00 மணிக்கு முன் கையளித்தல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேல் பெயர் குறிப்பிட்ட வழக்கறிஞர்களுக்கு) குறித்த தினத்திற்கு முன் கிடைக்கக் கூடியதாய் போதியளவு காலத்திற்கு முன் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சிரந்தி குணவர்தன அசோசியேட்ஸ்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.

4-606

---

## லைலா உம்மா தீன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

செயிட் அலி ஸாஹிர் மௌலானா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ,''லைலா உம்மா தீன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.:-

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து அனுமதிபெற்ற நம்பிகைப் பொறுப்புக்களுக்கும் நிதி மற்றும் நிதியல்லாத துறைகளில் உதவிகள் செய்வது;

(ஆ) விதவைகள், அநாதைகளுக்கு உதவிகள் புரிவதும் வறுமையை ஒழிப்பதும்;

(இ) தேவையுள்ள சிறுவர்களின் ஆரம்ப சிறுபராய அபிவிருத்திக்கென முன்பள்ளிப் பாடசாலைகளை தாபித்தலும் கொண்டு நடாத்துதலும்

பிறவும்.

செயிட் அலி ஸாஹிர் மௌலானா,
பாராளுமன்ற உறுப்பினர்.

4-657